வல்களை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லையென்று கூறி, அனுமதியை மறுக்கிறேன்.

(vi) **மதுரை கிராமப்புர, நகர்ப்புர காங்கிரஸ் அலுவலகங்கள் தாக்கப்பட்டதும், கடைகள், இல்லங்கள் இவற்றிற்கு ஏற்பட்ட சேதங்களும்**

THIRU N. S. V. CHITHAN : Sir, under rule 42 of the Madras Legislative Assembly Rules, I beg to give notice of a motion for adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely the attack on Madurai Urban District Congress Committee and the Rural District Congress Committee Office at Madurai recently and damages caused to the shops and residences on 17th February 1968 and arrests made on that day.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போலீஸ் தங்களுடைய கடமையை நிறைவேற்றுகின்ற நிலையில் அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இதற்காக பேரவையின் நிகழ்ச்சிகளை ஒற்றிவைப்பது முறையற்ற செயல் என்று கருதுகிறேன். இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாகையால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(vii) **கோயம்புத்தூரில் அவினாசி சாலை ரயில் பாதைக் கடப்பு வழியில் மா சே துங்கின் ஒட்டுப்படங்கள் திடீர் தோற்றம்**

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker Sir, I have given notice of the following adjournment motion :

"That the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance namely the sudden appearance of Mao Tse Tung's posters for the first time in Coimbatore near Avinasi Road level crossing."

According to rule 50 (viii) and (x) the matter to be discussed must involve more than the administration of the law and the motion must refer to a mater in which the responsibility of the Government is clearly involved. I shall explain very briefly.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போஸ்டர் ஒட்டுவது என்பது இந்தச் சர்க்காருடைய நிகழ்ச்சிக்கு எந்தவிதத்தில் தொடர்பு உடையது ? அதற்கு சர்க்கார் பொறுப்பேற்றுக் கொள்ள முடியுமா ? நிர்வாகத்துறையில் வேறு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமே தவிர, போஸ்டர் ஒட்டுவது ஒரு சாதாரண நிகழ்ச்சிதானே, அதைப்பற்றி விவாதிக்க எதற்காக இந்தச் சபை நிகழ்ச்சியை ஒத்திவைக்க வேண்டும் ?

DR. H. V. HANDE : I want a chance to explain the exact position. The relationship between India and China is very strained. China has made aggression and we have lost several of our brothers in the recent war. To have posters of Chinese

leaders in our country is not an ordinary thing. It is a very, very serious thing and the Ministry must immediately intervene in the matter and find out telephonicaly from the Collector of Coimbatore as to who put up the posters. I want the Ministry to act immediately. The posters of Mao Tse Tung and Chou En Lai will not be tolerated in Tamilnad.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்க காவல் துறையினர் இருக்கிறார்கள். சட்டத்திற்கு மீறி இது நடந்திருக்குமானால், முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். அதற்காக இந்தச் சபை நடவடிக்கையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எங்காவது தவறு நடந்தால், அதைத் திருத்துவதற்கு அரசாங்கத்திடம் பாது காப்புகள் இருக்கின்றன. இது அன்றாட நிகழ்ச்சியாகும். இதற்காக சபை நிகழ்ச்சியை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற காரணத்தினால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

அடுத்து பேரவை விதி 41-இன் கீழ் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அவசரப் பொதுமுக்கியம் வாய்ந்த—கவன ஈர்ப்புத் தீர் மானம் கொண்டு வருவார்கள்.

4. கவன ஈர்ப்பு

அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தல்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

" கடந்த சில மாதங்களாக சர்க்கரை, வெல்லம், கடலை எண்ணெய், பருப்பு வகைகளின் விலைவாசிகள் விஷம்போல் ஏறிக் கொண்டிருப்பதால் ஏழைமக்களும், தொழிலாளர்களும், வெகு வாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி, குறைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் ".

என்கிற அவசரமும் முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN, Mr. Deputy Speaker, Sir, the Honourable Member has, in his Call Attention Notice, referred to the rising price trends of sugar, cane jaggery, groundnut oil and pulses.

I shall deal with sugar first. Till February 1967, the quantity that was released by the Government of India for consumption in the Madras State was about 16.100 tonnes per month. Dur-